DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.262/2015

Deposition of Witness:DW3

| Name | அன்புமணி | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | காசிலிங்கம் | Village | |
| Age | 45 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **20.05.2026.** | | | |

(Accused present)

**எதிரி தரப்பு முதல் விசாரணை**

நான் வேகாகொல்லையில் வசித்து 2007 ஆம் ஆண்டு முதல் நர்சரி கார்டன் வைத்து நடத்தி வருகிறேன். இவ்வழக்கின் எதிரி ஜெயபால் என்பவர் மகாலட்சுமி அக்ரோ என்ற பெயரில் மருந்து கடை வைத்து நடத்தி வருவதன் வாயிலாக நான் அவரிடம் எனது நர்சரி கார்டனுக்கு மருந்து வாங்குவது தொடர்பாக 2007 ஆம் ஆண்டு முதல் அவர் எனக்கு பழக்கம். 2014 ஆம் ஆண்டு, நர்சரிக்கு தேவையான தார்பாய் வாங்கினேன், அது 10 நாட்களுக்குள் வீணாகி உலர்த்துபோய்விட்டது. பொதுவாக ஒரு தார்ப்பாய் வாங்கினால் அது ஒரு வருடம் வரை நிலைத்து நிற்கும் ஆனால் மேற்படி தார்பாய்கள் பத்து நாட்களுக்குள்ளாகவே உளுத்துப் போய்விட்டதனால் அது பற்றி ஜெயபாலிடம் புகார் செய்தோம் அதற்காக மேற்படி தார்ப்பாயை வாங்கிய காட்டுக்குப்பத்தில் இயங்கும் சர்வோ பேக்கேஜிங் நிறுவனத்திடம் கூறி, அதனை வந்து பார்க்க சொல்வதாக கூறினார். மேலும் ஜெயபால் மேற்படி நிறுவனத்தின் மேலாளர் ராஜன் பாபு என்பவரிடம் மேற்படி தார்பாய்கள் உலுத்து போய்விட்டது தொடர்பாக கூறி இருப்பதாகவும் அவர் வந்து எங்கள் உலுத்துப்போன தார்பாய்களை பார்ப்பார் என்றும் கூறினார். அதுபோலவே ராஜன் பாபு மற்றும் ஜெயபால் ஆகியோர் வந்து மேற்படி தார்பாய்களை வந்து பார்வையிட்டு போட்டோ எடுத்துக் கொண்டு குறித்துக் கொண்டு மேற்படி உளுத்துப்போன தார்பாய்களுக்கு தாங்கள் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் அதற்கான இழப்பீட்டினை எங்களுக்கு தருவதாகவும் கூறி சென்று விட்டனர். மேற்படி தார்பாய்களை வாங்கியது தொடர்பாக எனக்கு ரூபாய் 4 லட்சம் நஷ்டம் ஆகிவிட்டது. மேற்படி தார்பாய்களுக்கு இழப்பீடு பெற்று தருவது பற்றி அடிக்கடி ஜெயபாலிடம் கூறி வந்தோம் ஆனால் அவர் எவ்வித இழப்பீடும் பெற்று தரவில்லை. அதனைத் தொடர்ந்து என்னைப் போன்றே பாதிக்கப்பட்ட மேலும் சிலர் அவர்களுடன் சேர்ந்து மேற்படி சர்வோ பேக்கேஜிங் நிறுவனத்திற்கு சென்று பார்த்து மேற்படி தார்பாய்களுக்கான இழப்பீடு பற்றி கேட்டோம் அவர்களும் இழப்பீட்டினை கொடுத்து விடுவதாக கூறினார்கள் அதன் அடிப்படையில் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். ஆனால் மேற்படி நிறுவனத்திடம் இருந்து எங்களுக்கு எவ்வித பிரதிபலிப்பும் இல்லாததனால் நாங்கள் ஜெயபாலிடமே மீண்டும் மீண்டும் கேட்டோம். அதற்கு அவர் மேற்படி நிறுவனத்தார் அவர் மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறினார். மேற்படி சர்வோ பேக்கேஜிங் நிறுவனத்திடம் பொருள் வாங்குவதற்காக சூருட்டிக்காக இவர் கொடுத்திருந்த காசோலையை தான் அவ்வாறு அவருக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் என்னிடம் கூறினார்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரியின் நிறுவனத்திடம் இருந்து தார்பாய்கள் வாங்குவது தொடர்பாக பில் ஏதேனும் போட்டு வாங்கினேனா என்றால் பொதுவாக எங்களுக்குள் பில் போட்டு வாங்கும் பழக்கம் இல்லை. ஒரு நோட்டில் அவர் வாங்கப்படும் பொருட்கள் தொடர்பான கணக்கினை எழுதி வைத்துக் கொள்வார் பணம் கிடைக்கும் போதெல்லாம் அவ்வப்போது கொடுத்து கழித்துக்

கொள்வேன். மேற்படி நோட்டினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பது பற்றி ஜெயபால் என்னிடம் கூறினாரா என்றால் அது பற்றி எதுவும் என்னிடம் கூறவில்லை. மேற்படி சர்வோ பேக்கேஜிங் நிறுவனத்தை அணுகி தரமற்ற தார்பாய்கள் தொடர்பாக இழப்பீடு கேட்டதாக நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில் எழுத்துப்பூர்வமான புகார் ஏதேனும் அளித்துள்ளேனா என்றால் எழுத்துப்பூர்வமாக எதுவும் கொடுக்கவில்லை வாய் வழியாக தான் கேட்டோம். ஜெயபால் மேற்படி சர்வோ பேக்கேஜிங் நிறுவனத்தை அணுகி தரமற்ற தார்பாய்கள் தொடர்பாக இழப்பீடு கேட்டதாக எழுத்துப்பூர்வமான புகார் ஏதேனும் அளித்துள்ளாரா என்றால் அது பற்றி அவர் எதுவும் என்னிடம் சொல்லவில்லை. எழுத்துப்பூர்வமாக மேற்படி நிறுவனத்தால் எவ்வித உறுதிமொழியும் கொடுக்கப்படாத பட்சத்தில் நான் சொல்வது போல் எவ்வித கடனையும் சட்டபூர்வமாக கொடுப்பதற்கு மேற்படி நிறுவனம் கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. நான் எந்த ஒரு காலத்திலும் வியாபார ரீதியாக ஜெயபாலிடம் எந்த ஒரு தொடர்பும் வைத்துக் கொண்டதில்லை என்றால் சரியல்ல. நான் சரியில்லை என்றும் கூறும் பட்சத்தில் அது தொடர்பான ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் எங்களுக்கு இடையேயான வியாபாரம் சம்பந்தப்பட்ட நோட்டு புத்தகம் ஜெயபாலிடம் உள்ளது அதுதான் ஆதாரமாகும். ஜெயபால் எனது பக்கத்து ஊர்க்காரர் மற்றும் தொழில் ரீதியான பழக்கமுடையவர். 2014 முதல் 2015 வரை வாங்கப்பட்ட பொருட்களுக்காக ஜெயபால் நாராயணராவிடம் கொடுத்த காசோலை செக்யூரிட்டி காசோலையாக கருதப்பட இயலாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மேலே கூறியுள்ள சங்கதிகளை ஜெயபால் சொல்லிக் கொடுத்த தான் சொல்கிறேன் என்றால் இல்லை எனக்கு தார்ப்பாய் வாங்கிய விவகாரம் தெரியும். நான் ஜெயபாலுக்கு ஆதரவாக இவ்வழக்கில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் இவ்வழக்கு காசோலைக்கும் நான் சொல்லும் சங்கதிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**(ஓம்) S.கீதா,**
**நீதித்துறை நடுவர் எண்–I**
**பண்ருட்டி.**

**/உண்மை நகல்/**

**நீதித்துறை நடுவர் எண்–I**
**பண்ருட்டி.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.262/2015

Deposition of Witness:DW4

| Name | ஜெயக்குமார் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | இராமச்சந்திரன் | Village | |
| Age | 64 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **20.05.2026.** | | | |

(Accused present)

**எதிரி தரப்பு முதல் விசாரணை**

1. நான் வேகாக்கொல்லையில் வசித்து விவசாயம் செய்து கொண்டும், நர்சரி கார்டன் வைத்து நடத்தியும் வருகிறேன். இவ்வழக்கின் எதிரி ஜெயபால் பண்ருட்டி மற்றும் வேகாக்கொல்லை ஆகிய இடங்களில் மகாலட்சுமி அக்ரோ என்ற பெயரில் மருந்து கடை வைத்து நடத்தி வந்தார். மேற்படி எனது நர்சரிக்கும் விவசாயம் தொடர்பாகவும் மருந்து வாங்குவது தொடர்பாக எனக்கும் அவருக்கும் 2000 ஆம் ஆண்டு முதல் பழக்கம். 2014 ஆம் ஆண்டு தார்பாய் 3 கூடாரத்திற்கு ஏற்றார்போல் ஜெயபாலிடம் வாங்கினேன். எங்களது நர்சரி கார்டனில் மண்ணில் குச்சிகளை மட்டும் பேக்கிங் செய்து அதன் மீது மேற்படி தார்ப்பாய்களை கூடாரங்களாக அமைத்து வேர் வரும் வரை காத்திருப்போம் பின்னர் தான் அது செடியாக உருமாறும் மேற்படி குச்சிகள் 30 லிருந்து 45 நாட்கள் வரை உள்ளே காற்று புகாமல் இருந்தால்தான் அதிலிருந்து வேர்கள் உருவாகும் மேற்படி தார்பாய்கள் தரமற்றவையாக இருந்ததனால் ஒரு வாரம் முதல் 10 நாட்களுக்குள் உலுத்து போய்விட்டன அதனால் காற்று உள்ளே புகுந்து மேற்படி குச்சிகள் வீணாகி லட்சக்கணக்கில் எனக்கு நஷ்டம் ஏற்பட்டது. எனவே மேற்படி தார்பாய்கள் வீணாகிவிட்டதை பற்றியும் அதனால் நஷ்டம் ஏற்பட்டது பற்றியும் ஜெயபாலிடம் கூறினோம் அவர் கம்பெனிக்காரர்களிடம் கூறி அதை சரி செய்து தருவதாக கூறினார் மேலும் சிறிது நாட்கள் கழித்து நாங்கள் ஜெயபாலை அணுகி அது பற்றி கேட்டபோது அவர் மேற்படி சர்வோ பேக்கேஜிங் கம்பெனியின் மேலாளர் ராஜன் பாபு என்பவரை சென்று சந்தித்து அதனை தொடர்ந்து ராஜன் பாபுவும், மற்றொருவரும் எங்களது நர்சரிக்கு வந்து பார்த்தார்கள் பார்த்துவிட்டு நடந்ததை நாங்கள் கூறினோம் அதனை கேட்டு குறித்துக்கொண்டு புகைப்படமும் எடுத்துக் கொண்டு சென்று விட்டனர் மேலும் அவர்கள் எங்களுக்கு இழப்பீடு தருவதாக கூறினார்கள் இரண்டு மூன்று மாதங்கள் ஆகியும் இழப்பீடு எதுவும் கொடுக்கப்படவில்லை எனவே நாங்கள் மீண்டும் ஜெயபாலை அணுகி இது பற்றி கேட்டோம். அப்போது அவர் என்னையும் என்னை போன்றே பாதிக்கப்பட்ட அன்புமணி வேல்முருகன் போன்ற மேலும் சிலரையும் அழைத்துக் கொண்டு மேற்படி நிறுவனத்திற்கு சென்றார் அங்கு திரு.ராஜன்பாபுவை சந்தித்து நாங்கள் இழப்பீடு பற்றி கேட்டோம் அவரும் இழப்பீட்டிற்கு ஏற்பாடு செய்வதாக சொல்லி எங்களை அனுப்பிவிட்டார். அதன் பிறகு மீண்டும் ஜெயபாலை அணுகி மேற்படி இழப்பீடு பற்றி கேட்டபோது அவர் என்னிடம் மேற்படி சர்வோ பேக்கேஜிங் நிறுவனத்தார் தான் செக்யூரிட்டிக்காக கொடுத்திருந்த எழுதாத காசோலையை பயன்படுத்தி தன்மீதே காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்திருப்பதாக கூறினார். மேலும் ஜெயபால் அப்போது என்னிடம் தேவைப்பட்டால்

உண்மையை சொல்வதற்கு நான் நீதிமன்றம் வரக்கூடும் என்று கூறினார் நானும் சரி என்று கூறினேன். மேற்படி தரமற்ற தார்பாய்களை பெற்றதனால் எனக்கே நான்கு ஐந்து லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்னைப் போன்றே, மேலும் 6, 7 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**மனுதாரர்தரப்பில்குறுக்குவிசாரணை**

1. ஸ்ரீ மகாலட்சுமி அக்ரோ சென்டருக்கு ஜெயபால் மட்டும்தான் உரிமையாளர் என்றால் சரிதான். இவ்வழக்கு காசோலையை மேற்படி நிறுவனத்தின் பெயரில்தான் எழுதி ஜெயபால் கொடுத்துள்ளார் என்றால் எழுதாத காசோலை என்று மட்டும் தான் கூறினார் மற்ற விவரம் எனக்கு தெரியாது. 2014 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை வாங்கிய பொருட்களுக்காக தான் இவ்வழக்கின் எதிரி ஜெயபால் சர்வோ பேக்கேஜிங் லிமிடெட்டிற்கு இவ்வழக்கு காசோலையை வழங்கி உள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது செக்யூரிட்டிக்காக கொடுத்ததாக தான் அவர் என்னிடம் கூறினார். எந்த ஆண்டிற்கான செக்யூரிட்டிக்காக கொடுத்ததாக அவர் என்னிடம் கூறினாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரி வியாபார ரீதியாக தான் எனக்கு பழக்கம் என்றால் சரிதான்.

2. மேற்படி தார்ப்பாய் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள் நான், ராமகிருஷ்ணன், அன்புமணி, வேல்முருகன், பன்னீர் ஆகியோர்கள்.மேற்படி அனைவருமே வேகாக்கொல்லையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி நஷ்ட ஈட்டினை சர்வோ பேக்கேஜிங் லிமிடெட் கொடுக்கவில்லை என்பது தொடர்பாக நானோ ஜெயபாலோ நீதிமன்றத்திலோ காவல் நிலையத்திலோ புகார் ஏதேனும் அளித்துள்ளோமா என்றால் நான் எதுவும் அளிக்கவில்லை ஜெயபால் அளித்துள்ளாரா இல்லையா என்பது எனக்கு தெரியாது. மேற்படி எனக்கும் எதிரிக்கும் இடையேயான வியாபார பரிவர்த்தனைகள் தொடர்பாக ரசீது வாங்கியுள்ளேன் என்றால் ரசீது எல்லாம் கிடையாது வாங்கப்படும் பொருட்களுக்கு உடைய கணக்கினை ஜெயபால் நோட்டில் எழுதி வைத்துக் கொள்வார் பணம் கொடுக்க கொடுக்க அதில் வரவு வைத்து குறித்துக்கொள்வார். மேற்படி ராஜன்பாபு நஷ்ட ஈடு வாங்கித் தருவதாக கூறிவிட்டு அவ்வாறு எதுவும் வாங்கிக் கொடுக்காதது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உரிமையாளரை அணுகி புகார் ஏதேனும் கொடுத்துள்ளோமா என்றால் கொடுக்கவில்லை. மேற்படி தார்பாய்கள் தரமற்றதை கொடுத்தது தொடர்பாக ஜெயபால் மீது ஏதேனும் நாங்கள் புகார் அளித்துள்ளோமா என்றால் அவர் மீது நம்பிக்கை இருந்ததால் நாங்கள் புகார் எதுவும் அளிக்கவில்லை.

3. சர்வோ பேக்கேஜிங் நிறுவனத்தார் எவ்வித எழுத்துப்பூர்வமான உறுதி மொழியும் அளிக்காத நிலையில் மேற்கண்ட சங்கதிகளை நான் கூறுவதை ஏற்றுக்கொள்ள இயலாது என்றாலும் மேற்படி நிறுவனத்தார் எங்களுக்கு சட்டப்படி எந்தவித கடன் தொகையும் திருப்பிக் கொடுக்க வேண்டியது இல்லை என்றாலும் சரியல்ல. இவ் வழக்கு காசோலையானது சர்வோ பேக்கேஜிங் லிமிடெட்க்கு எதிரி ஜெயபால் கொடுக்க வேண்டிய சட்டப்படியான கடனை வசூல் செய்வது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட காசோலை என்றாலும் எனவே இது தொடர்பாக எனது சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் எவ்வித முகாந்திரமும் ஆதாரமும் இல்லாமல் ஜெயபால் எனக்கு வியாபார ரீதியாக பழக்கமானவர் என்பதன் அடிப்படையில் அவருக்கு அனுசரணையாக இவ்வழக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றாலும் அது எந்த விதத்திலும் இவ்வழக்கின் புகார்தாரரை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. எத்தனை முறை எதிரி

ஜெயபாலிடம் வியாபார ரீதியாக நோட்டில் கணக்கு எழுதி கையெழுத்து போட்டு பொருட்கள் வாங்கியுள்ளேன் என்றால் எனக்கு குறிப்பாக ஞாபகம் இல்லை ஏனெனில் 2000 ஆண்டு முதல் எங்களுக்குள் வியாபார ரீதியான பழக்கம் இருந்து வந்தது. மேற்படி தரமற்ற தார்பாய்களை ஜெயபாலிடமிருந்து நான் எப்போது வாங்கினேன் என்றால் 2014 ஆம் ஆண்டு வாங்கினேன் எந்த மாதம் என்றால் வெயில் நாளில் வாங்கினேன் வெயில் நாளில் தான் தார்ப்பாய் போடுவோம் மாதம் தேதி சரியாக தற்போது ஞாபகம் இல்லை. அதன் பிறகு ஜெயபாலிடம் தார்ப்பாய் வாங்கியுள்ளோமா என்றால் வாங்கவில்லை. இவ்வழக்கு காசோலையில் குறிப்பிட்டுள்ள கடனுக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் எனவே என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**(ஓம்) S.கீதா,**
**நீதித்துறை நடுவர் எண்–I**
**பண்ருட்டி.**

**/உண்மை நகல்/**

**நீதித்துறை நடுவர் எண்–I**
பண்ருட்டி.